# சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் இன்று மாணவர்களுக்கான போட்டி தேர்வு

சென்னை, பிப்.15: மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில், பள்ளி மாணவ, மாணவிகளுக்கான போட்டி தேர்வு சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

இதுதவிர, வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் சமூக விழிப்புணர்வு நாடக நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

தமிழ் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில், மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில், பல்வேறு இசை மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒருபகுதியாக, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இருநாள்கள் இசை மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் முதல் விமான நிலையம் வரை மெட்ரோ ரயிலில் 'ஆன் தி ஸ்ட்ரீட் ஆப் சென்னை'

என்ற கலைக் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை பொதுமக்கள், மெட்ரோ பயணிகள் கண்டுகளித்தனர்.

**மாணவர்களுக்கான போட்டித் தேர்வு:**

சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் இரண்டாவது நாளாக ஞாயிற்றுக்கிழமை (பிப்ரவரி 16) மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 வரை இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இதுதவிர, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் காலை 10.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு போட்டித் தேர்வு நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் 1,500 மாணவர்கள் பங்கேற்க உள்ளனர்.

இதுதவிர, சமூக விழிப்புணர்வு, ஒரு குடிமகனின் பொறுப்பு ஆகியவற்றை விளக்கும் வகையில், நாடக நிகழ்ச்சி வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை மெட்ரோ ரயில் நிறுவனமும், ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்பும் இணைந்து செய்து வருகின்றன.